IndianOil









# Media Coverage Done for National LPG Conclave 2020

## 28.02.2020 & 29.02.2020 - Coimbatore

Organized by

ALMEDIA

(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)

• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

## The Times of India - 29-2-2020

# Indian Oil to release LPG from renewable sources

TIMES NEWS NETWORK

**Coimbatore:** Indian Oil Corporation Limited (IOCL) is targeting to ensure that at least 10% to 20% of LPG produced in the country is from renewable energy sources in the next two to three years, said director of the research and development wing of the company S S V Ramakumar.

He was speaking at the inauguration of the two-day National LPG Conclave 2020 in the city on Friday.

He said their research has so far shown that LPG can be produced from alternate sources like vegetable oil, glycerol and biomass. Indian Oil is now working on technology to scale up that production.

"We already have proof of concept that bio mass can be converted into LPG. Now we are working on the technology for us to do that in large scale," Ramakumar said.

"The technology to convert glycerol, vegetable oil or even biomass into LPG is present already but yet to mature," he added.

Getty Images/iStockphoto



POWER TO THE KITCHEN

The conclave acknowledged that LPG's growth potential as a cooking gas has nearly saturated, with more than 95% of households already being connected. Now, promoting LPG as an auto fuel has potential. In this regard, Ramakumar said Indian Oil had developed a technology to extract "auto LPG" directly from the fossil fuels.

"LPG as an auto fuel needs more olefinic properties, being a mixture of propane and butane, which is slightly different from our cooking gas requirements. However, this technology is also in the laboratory stage. We will install it soon in one of our refineries," Ramakumar said.

Auto gas in our country is now CNG (compressed natural gas), which is slightly more efficient than LPG, he said. LPG produces less NOX and methane emissions, making it a cleaner form of energy. "CNG may give 1km more mileage than LPG per kg, but it gives more NOX and methane slip emissions, which are polluting. Auto LPG may also become more cost efficient, because our new extraction technology requires lower temperatures than usual," Ramakumar said.

The conclave also plans to discuss potential for LPG being used in industrial and commercial purposes, including hotel, food and glass industries, among others.

## The New Indian Express - 29-2-2020

# IOCL to work on producing LPG through renewable energy

EXPRESS NEWS SERVICE
@ Coimbatore

INDIAN Oil Corporation Limited (IOCL) is at the forefront to scale up the principle concept technology to produce Liquid Petroleum Gas (LPG) through renewable sources, said SSV Ramakumar, director (research and development) of the corporation.

He was speaking with the reporters on the sidelines of the inaugural event of a two-day-long national LPG conclave organised by IOCL at Coimbatore on Friday. Ramakumar said the target by the World LPG Association is that by 2040, 50 per cent of the LPG consumption should be from renewable sources.

"There are several renewable energy sources that are there like vegetable oil, glycerol. None of the technologies are mature and not reached economies of scale. So, we should work on India-centric technology to use bio-LPG," he explained.



Addressing the gathering, Ramakumar said the carbon must be captured to convert as value-added products. On the other hand, B Ashok, CEO of Ratnagiri Refinery and Petrochemicals Limited said the use of LPG has registered a steep increase with the growth of the food industry. He also urged for awareness to be created for the use of LPG in industries.

Ashok further stated that climate change is a major concern to tackle. This is the time to move to clean fuel to be pollution-free, he said, adding India from April would move to BS-VI fuel.

Highlighting the central government's digital India campaign, he said the business could be transformed with the help of the technology.

Over 1,000 delegates are likely to attend seven technical sessions during the conclave that focus on the host of issues facing the non-domestic segment of LPG including the comparative sector-wise consumption of the fuel. The conclave also included an exhibition with 55 stalls of LPG's value-added products for the participants.

# National LPG Conclave 2020

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

## Dinamani - 29-2-2020

### அடுத்த சில ஆண்டுகளில் பயோ எல்.பி.ஜி.

**இந்தியன் ஆயில் நிறுவன ஆராய்ச்சி இயக்குநர் தகவல்**

கோவை, பிப். 28: புதுப்பிக்கத்தக்க மூலங்களில் இருந்து எல்.பி.ஜி. தயாரிப்பு தொடர்பான ஆராய்ச்சிகள் தீவிரமாக நடைபெற்று வருவதால் அடுத்த சில ஆண்டுகளில் இந்த வகை எல்.பி.ஜி. சந்தைக்கு வரும் என இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி, அபிவிருத்தி இயக்குநர் எஸ்.எஸ்.வி.ராமகுமார் தெரிவித்துள்ளார்.

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் எல்.பி.ஜி. (திரவ பெட்ரோலிய எரிவாயு) குறித்த இரண்டு நாள் தேசிய கருத்தரங்கு சரவணம்பட்டியில் வெள்ளிக்கிழமை தொடங்கியது. கருத்தரங்கை, ரத்னகிரி ரிபைனரிஸ் அண்ட் பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் பி.அசோக் தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில், முக்கிய விருந்தினராக இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி, அபிவிருத்தி இயக்குநர் எஸ்.எஸ்.வி.ராமகுமார் கலந்து கொண்டார்.

முன்னதாக அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு, தொல்படிம எரிபொருள், ஈரமான இயற்கை எரிவாயுவை சுத்திகரிப்பு செய்வது போன்ற முறைகளின் மூலம் திரவ பெட்ரோலிய எரிவாயு தயாரிக்கப்படுகிறது.

ஆனால், எதிர்கால எரிபொருள் தேவையைக் கருத்தில் கொண்டு புதுப்பிக்கத்தக்க மூலங்களில் இருந்து எல்.பி.ஜி. தயாரிப்பது தொடர்பான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. வரும் 2040ஆம் ஆண்டுக்குள் உலக எல்.பி.ஜி. பயன்பாட்டில் 50 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க மூலங்களில் இருந்து தயாரிக்க உலக எல்.பி.ஜி. சங்கம் திட்டமிட்டுள்ளது. காய்கறிக் கழிவுகள், கிளிசரால் போன்றவற்றில் இருந்து பயோ எல்.பி.ஜி. தயாரிக்க முடியும். இதற்கான தொழில்நுட்பங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. இருப்பினும் இவை தொடக்க நிலையில் இருப்பதால் சிறிய அளவிலான எல்.பி.ஜி. மட்டுமே தயாரிக்கப்படுகிறது.

இந்தியாவில் அடுத்த சில ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் இருந்து அதிக அளவில் உயிரி எல்.பி.ஜி. தயாரிக்கப்படும். அது தற்போதைய எல்.பி.ஜி. பயன்பாட்டில் 10 முதல் 20 சதவீதம் வரை பங்களிப்பை வழங்கக் கூடியதாக இருக்கும் என்றார்.



கோவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற எல்.பி.ஜி. தொடர்பான கண்காட்சியைத் திறந்துவைக்கிறார் ரத்னகிரி ரிபைனரிஸ் அண்ட் பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் பி.அசோக் (வலது முதலாவது). உடன், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி, அபிவிருத்தி இயக்குநர் எஸ்.எஸ்.வி.ராமகுமார், சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் எஸ்.என்.பாண்டே உள்ளிட்டோர்.

## The Hindu Tamil - 29-2-2020

### புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் எல்.பி.ஜி. தயாரிக்க ஆராய்ச்சி

• இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவன இயக்குநர் தகவல்

கோவை

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் இருந்து திரவ பெட்ரோலிய எரிவாயு (எல்.பி.ஜி.) தயாரிப்பது தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருவதாக, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் (ஐஓசி) இயக்குநர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) எஸ்.எஸ்.வி.ராமகுமார் தெரிவித்தார்.

ஐஓசிசார்பில் திரவ பெட்ரோலிய எரிவாயு (எல்.பி.ஜி.) தொடர்பான இரண்டு நாள் தேசிய கருத்தரங்கு, கோவை சரவணம்பட்டியில் நேற்று தொடங்கியது. கருத்தரங்கை தொழிலதிபர் பி.அசோக் தொடங்கி வைத்தார்.

முக்கிய விருந்தினரான ஐஓசி இயக்குநர் எஸ்.எஸ்.வி.ராமகுமார், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு, தொல்படிம எரிபொருள், ஈரமான இயற்கை எரிவாயுவை சுத்திகரிப்பு செய்வது போன்ற முறைகள் மூலமாக, திரவ பெட்ரோலிய எரிவாயு (எல்.பி.ஜி.) தயாரிக்கப்படுகிறது. எனினும், எதிர்கால எரிபொருள் தேவையைக் கருத்தில்கொண்டு, புதுப்பிக்கத்தக்க மூலங்களில் இருந்து எல்.பி.ஜி. தயாரிப்பது தொடர்பான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2040-ம் ஆண்டுக்குள் உலக எல்.பி.ஜி. பயன்பாட்டில் 50 சதவீதத்தை, புதுப்பிக்கத்தக்க மூலங்களில் இருந்து தயாரிக்க உலக எல்.பி.ஜி. சங்கம் திட்டமிட்டுள்ளது. காய்கறி கழிவுகள், கிளிசரால் போன்றவற்றில் இருந்து எல்.பி.ஜி. தயாரிக்க முடியும். இதற்கான தொழில்நுட்பங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. எனினும், தொடக்க நிலையில் இருப்பதால், சிறிய அளவிலான எல்.பி.ஜி. மட்டுமே தயாரிக்கப்படுகிறது.

இந்தியாவில் அடுத்த சில ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் இருந்து உயிரி எல்.பி.ஜி. தயாரிக்கப்படும். இது தற்போதைய எல்.பி.ஜி. பயன்பாட்டில் 10 முதல் 20 சதவீதம் வரை இருக்கும். சமையலுக்குப் பயன்படுத்தப்படும் எல்.பி.ஜி. எளிதில் ஆவியாகும் என்பதால், வாகனங்களை இயக்குவதற்கு அதை பயன்படுத்த முடியாது. சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத, கந்தகத்தை அதிகம் உமிழாத ஆட்டோ காஸ் எனப்படும் வாகன எரிபொருளை நேரடியாக தயாரிக்க திட்டமிட்டுள்ளோம். இதற்கான இண்டலின் பிளஸ் என்ற புதிய தொழில்நுட்பம் ஆராய்ச்சி அளவில் உள்ளது. விரைவில் ஆட்டோ எல்.பி.ஜி. சந்தையில் கிடைக்கும். வாகன எரிபொருள், காஸ் உள்ளிட்டவற்றின் விலையை சர்வதேச சந்தைகளே தீர்மானிக்கின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

தொழிலதிபர் பி.அசோக் பேசும்போது, "காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகள் குறித்து, சர்வதேச அளவில் விவாதிக்கப்பட்டு வருகிறது. எதிர்கால சந்ததியினர் நலமான வாழ்வை வாழ வேண்டுமென்றால், அவர்களுக்கு ஆரோக்கியமான சுற்றுச்சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதே நேரம், பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறவும், மனிதர்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்குச் செல்லவும் எரிபொருள்கள் அவசியமாகின்றன. எனினும், அந்த எரிபொருள் சூழலுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். எனவேதான், பசுமை எரிபொருள் குறித்து சிந்திக்கத் தொடங்கியுள்ளோம்.

வரும் ஏப்ரல் முதல் பி.எஸ். 6 எரிபொருளை வாகனங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது. எனவே, எரிசக்தி வளர்ச்சியில் புதிய வாய்ப்புகளை கண்டறியவும், தொழிற்சாலைகளில் எல்.பி.ஜி. உபயோகத்தை அதிகரிப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இதுபோன்ற கருத்தரங்குகள் அவசியமாகின்றன" என்றார்.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவன மாநில செயலாக்க இயக்குநர் ஜெயதேவன் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த ஐஓசி அதிகாரிகள், எரிபொருள் நிபுணர்கள் பங்கேற்றுள்ளனர். மேலும், எரிபொருட்கள் உபகரணங்கள் தொடர்பான கண்காட்சியும் நடைபெற்று வருகிறது. இன்றும் (பிப்.29) கருத்தரங்கு நடைபெற உள்ளது.



▲ கோவையில் நேற்று தொடங்கிய தேசிய அளவிலான எல்.பி.ஜி. கருத்தரங்கையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை பார்வையிடும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவன இயக்குநர் எஸ்.எஸ்.வி.ராமகுமார். படம்: ஜெ.மனோகரன்

# Malayala Manorama - 29-2-2020




ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷൻ ലിമിറ്റഡ് കോയമ്പത്തൂരിൽ നടത്തുന്ന കോൺക്ലേവ് രത്നഗിരി റിഫൈനറീസ് ആൻഡ് പെട്രോ കെമിക്കൽസ് ലിമിറ്റഡ് ചെയർമാൻ ബി. അശോക് ഉദ്ഘാടനം ചെയ്യുന്നു.

## എൽപിജി ദേശീയ കോൺക്ലേവ് തുടങ്ങി

**കോയമ്പത്തൂർ** ● ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷൻ ലിമിറ്റഡിന്റെ (ഐഒസിഎൽ) എൽപിജി ദേശീയ കോൺക്ലേവ് തുടങ്ങി. ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷൻ റിസർച്ച് ആൻഡ് ഡവലപ്മെന്റ് ഡയറക്ടർ ഡോ.എസ്.എസ്.വി .രാമകുമാർ മുഖ്യാതിഥിയായി പങ്കെടുത്തു. രത്നഗിരി റിഫൈനറീസ് ആൻഡ് പെട്രോകെമിക്കൽസ് ലിമിറ്റഡ് ചെയർമാൻ ബി.അശോക് ഉദ്ഘാടനം ചെയ്തു.

ചെന്നൈ പെട്രോളിയം കോർപറേഷൻ ലിമിറ്റഡ് മാനേജിങ് ഡയറക്ടർ എസ്.എൻ.പാണ്ഡെ, എസ്. പട്ടാഭിരാമൻ എന്നിവർ പ്രസംഗിച്ചു.

ഭാവിയിലെ ഉപയോഗത്തിനനുസൃതമായി എൽപിജിയുടെ വളർച്ച വിലയിരുത്താൻ ശിൽപശാല നടത്തി.. എൽപിജി ബോധവൽക്കരണ പ്രദർശനവും നടത്തി. സമ്മേളനം ഇന്ന് സമാപിക്കും.

# Mathruboomi - 29-2-2020

## എൽ.പി.ജി. കോൺക്ലേവ് ആരംഭിച്ചു




കോയമ്പത്തൂരിൽ ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷന്റെ ദേശീയ എൽ.പി.ജി. കോൺക്ലേവിന്റെ ഉദ്ഘാടനം രത്നഗിരി റിഫൈനറീസ് ആൻഡ് പെട്രോ കെമിക്കൽസ് ലിമിറ്റഡ് ചെയർമാൻ ബി. അശോക് നിർവഹിക്കുന്നു. ചെന്നൈ പെട്രോളിയം കോർപറേഷൻ മാനേജിങ് ഡയറക്ടർ എസ്.എൻ. പാണ്ഡെ സമീപം

**കോയമ്പത്തൂർ** ▸ ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷൻ രണ്ടുദിവസത്തെ ദേശീയ എൽ.പി.ജി. കോൺക്ലേവ് വെള്ളിയാഴ്ച കോയമ്പത്തൂർ ശരവണംപട്ടിയിൽ ആരംഭിച്ചു.

രാജ്യത്തിന്റെ വിവിധ ഭാഗങ്ങളിൽനിന്നായി ആയിരത്തിയഞ്ഞൂറോളം പ്രതിനിധികൾ സമ്മേളനത്തിൽ പങ്കെടുക്കുന്നുണ്ട്. രത്നഗിരി റിഫൈനറീസ് ആൻഡ് പെട്രോ കെമിക്കൽസ് ലിമിറ്റഡിന്റെ ചെയർമാൻ ബി. അശോക് ഉദ്ഘാടനം ചെയ്തു. ഐ.ഒ.സി. എക്സിക്യൂട്ടീവ് ഡയറക്ടർ പി. ജയദേവൻ, ഐ.ഒ.ബി. റിസർച്ച് ആൻഡ് ഡെവലപ്മെന്റ് ഡയറക്ടർ ഡോ. എസ്.എസ്.വി. രാമകുമാർ, ചെന്നൈ പെട്രോളിയം കോർപറേഷൻ മാനേജിങ് ഡയറക്ടർ എസ്.എൻ. പാണ്ഡ്യൻ എന്നിവർ പ്രസംഗിച്ചു.

# National LPG Conclave 2020

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying • Media Planning • Rural Marketing

## Afternoon - 29-2-2020

### Industry experts focus on rise in demand for LPG



Mr Ashok (third from left), Chairman of Ratnagiri Refineries & Petrochemicals Limited, is seen inaugurating the two-day national level LPG Conclave 2020 organised by the Indian Oil Corporation in Coimbatore. Mr S N Pandey, Mr SSV Ramakumar and Mr. Jeyadevan, Executive Director, IOCL, Tamil Nadu State Office are also seen

**COIMBATORE, FEB. 29**

As demand for Liquid Petroleum Gas (LPG) is on the rise, alternate means to increase supply and judicious management of the resource was discussed by industry experts and leaders at a two-day national level LPG Conclave 2020 organised by the Indian Oil Corporation Limited began here today at the Aditya convention centre on the Thuidyalur-Saravnampatti Road.

Mr B Ashok, Chairman of Ratnagiri Refineries & Petrochemicals Limited, who was the guest of honour, inaugurated the workshop by lighting the traditional lamp. Dr SSV Ramakumar, Director of Research & Development, Indian Oil Corporation was the chief guest.Mr.P Jeyadevan, Executive Director, IOC, TNSO, welcomed the gathering. He said that 55 research papers have been submitted in the two-day national level workshop.

In his speech, Mr S N Pandey, Managing Director, Chennai Petroleum Corporation Limited, said that the use of LPG is on the rise in various industries, particularly the glass blowing industries which requires high quality LPG followed by automobile industries. The requirement of LPG is on the rise given the importance on maintaining clean environment.

The aim of this national level workshop is to assess the growth of LPG in terms of its future utilisation said Dr SSV Ramakumar, Director of Research & Development, Indian Oil Corporation. Awareness on the need to prevent global warming has been created at the world level and the level of global warming can be further brought down with the increased use of LPG. Researches should be carried out to convert the carbon di-oxide into an alternative source of energy and to utilise the same, he said. Technical researches have been stepped and are going on in full swing to produce bio-LPG by the year 2040. Researches in de-carbonisation have also been going in the use of LPG, he added.

Mr B Ashok, Chairman of Ratnagiri Refineries & Petrochemicals Limited, noted that exploration for new avenues in the use of energy will be more useful for the country's economic growth. Kerala state has large number of auto LPG stations and the first auto LPG station was launched in Kochi. Now auto LPG stations have come up in Karnataka also. The use of liquid energy sources should be improved for preventing global warming and to maintain clean environment. Quality LPG kits should be produced and used in old vehicles also. The use of LPG has registered a steep increase with the growth of the food industry. Awareness should be created for the use of LPG in industries. The digital technology should be used in the auto LPG sector also, he said. An awareness exhibition on LPG was also inaugurated in the workshop. Mr S. Pattabhiraman proposed the vote of thanks.

## Pirpagal - 29-2-2020

### சுற்று சூழல் கேடில்லாத எல்பிஜி பயன்பாடு அதிகரிக்க விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்

**கோவை கருத்தரங்கில் வலியுறுத்தல்**



**கோவை, பிப். 29**

[illegible]

# Tamil Murasu - 29-2-2020

## கோவையில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தேசிய கருத்தரங்கு



**கோவையில் இந்தியன் ஆயில் நிறுவன கண்காட்சியை அசோக் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் நிறுவனத்தின் இயக்குனர் ராம்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.**

**கோவை,பிப்.29-**

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் கோவையில் தேசிய அளவிலான 2 நாள் கருத்தரங்கு நடந்தது.

விழாவில் கௌரவ விருந்தினராக ரத்னகிரி பைனான்ஸ் பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர் அசோக் கலந்து கொண்டு கருத்தரங்கை குத்துவிளக்கு ஏற்றி துவக்கிவைத்தார். இதில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி

மற்றும் அபிவிருத்தி இயக்குனர் ராம்குமார் கலந்து கொண்டார்.

விழாவிற்கு வந்தவர்களை இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் வரவேற்றார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவன நிர்வாக இயக்குனர் பாண்டே பேசியதாவது: நாடு முழுவதும் தொழிற்சாலைகளில் எல்.பி.ஜி. பயன்பாடு அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக கண்ணாடி தொழிற்சாலைகளில் தரமான எரிபொருள் தேவைக்காக எல்பிஜி கூடுதல் பயன்பாடாக உள்ளது. தற்போது இது ஆட்டோ தொழிற்சாலைகளிலும் பயன்பாட்டுக்கு வந்துள்ளது என்றார். இயக்குனர் ராமகுமார் பேசும்போது எதிர்காலப் பயன்பாட்டு நோக்கில், எல்பிஜியின் வளர்ச்சியை கணித்தல் இந்த கருத்தரங்கின் நோக்கமாகும். புவி வெப்பமயமாதலை கட்டுப்படுத்துவதில் உலகம் முழுவதும் விழிப்புணர்வுஏற்பட்டு வருகிறது என்றார்.

# Thinaboomi - 29-2-2020

## கோவையில் ஐஓசிஎல் சார்பில் 2 நாள் தேசிய அளவிலான எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு



**கோவை, பிப்.29-**

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் கோவையில் தேசிய அளவிலான 2 நாள் எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு கோவை சரவணம்பட்டி - துடியலூர் சாலையில் உள்ள ஆதித்யா கன்வென்சன் சென்டரில் துவங்கியது.

இந்த நிகழ்ச்சிக்கு கௌரவ விருந்தினராக ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர் பி. அசோக் கலந்து கொண்டு கருத்தரங்கை குத்துவிளக்கு ஏற்றி துவக்கிவைத்தார். முக்கிய விருந்தினராக இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் எஸ். எஸ். வி. ராமகுமார் கலந்து கொண்டார்.

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் வரவேற்புரை ஆற்றினார். விழாவில் முக்கிய விருந்தினராக கலந்து கொண்ட சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எஸ். என். பாண்டே பேசுகையில் பல்வேறு தொழிற்சாலைகளில் எல்.பி.ஜி. பயன்பாடு கூடிவருகின்றது. குறிப்பாக கண்ணாடித் தொழிற்சாலைகளில் தரமான எரிபொருள் தேவைக்காக எல்பிஜி கூடுதல் பயன்பாடாக உள்ளது. தற்போது ஆட்டோ தொழிற்சாலைகளிலும் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. சுற்றுச்சூழல் நலன் நோக்கில் எல்பிஜி தேவை அதிகரித்துள்ளது. என்று பேசினார்.

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் எஸ். எஸ். வி. ராமகுமார் பேசும் போது :- எதிர்காலப் பயன்பாட்டு நோக்கில், எல்பிஜியின் வளர்ச்சியைக் கணித்தல் இந்த கருத்தரங்கின் நோக்கமாகும். புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்துவதில் உலகம் முழுக்கவே விழிப்புணர்வு உருவாகியுள்ளது. எல்பிஜி மூலம் புவி வெப்பமயமாவதை குறைக்க இயலும். கார்பன் டை ஆக்சைடு வாயுவை மாற்று சக்தியாக மாற்றி பயன்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எல்பிஜியின் பன்னோக்குப் பயன்பாட்டை இந்தக் கருத்தரங்கில் விவாதிக்க முடிந்தது. எல்பிஜி ஆட்டோ மொபைல் எரிசக்தி வளர்ச்சியையும் நாடு எதிர்நோக்கியுள்ளது. ஆட்டோ எல்பிஜிக்கான அடிப்படைக் கட்டமைப்பு மேலும் வலுப்படவுள்ளது. சேமிப்பு நோக்கில், எல்பிஜி பயன்பாட்டை சிக்கன மேலாண்மையோடு பயன்படுத்த வேண்டும். 2040-ல் பயோ எல்பிஜி உருவாக்கம் முழு வீச்சில் அமைய, தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. எல்பிஜி பயன்பாட்டில் டி-கார்பனைசேஷன் தொடர்பான ஆய்வுகள் தீவிரமாக நடைபெறுகின்றன. இவ்வாறு அவர் பேசினார்.

மேலும் ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர் பி. அசோக் இதன் சிறப்பு குறித்து பேசினார்.

இந்த கருத்தரங்கை முன்னிட்டு எரிவாயு விழிப்புணர்வு பற்றிய கண்காட்சியும் இந்த வளாகத்தில் ஏற்பாடு நடைபெறுகிறது. விழா முடிவில் பட்டாபிராமன் நன்றி கூறினார். இந்த கருத்தரங்கு இன்றுடன் நிறைவு பெறுகிறது.

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

# Tamil Sudar - 29-2-2020

## கோவையில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு

கோவை, பிப். 29 -

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் கோவையில் தேசிய அளவிலான 2 நாள் எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு கோவை சரவணம்பட்டி – துடியலூர் சாலையில் உள்ள ஆதித்யா கன்வென்சன் சென்டரில் துவங்கியது.

இந்த நிகழ்ச்சிக்கு கௌரவ விருந்தினராக ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர் பி. அசோக் கலந்து கொண்டு கருத்தரங்கை குத்துவிளக்கு ஏற்றி துவக்கிவைத்தார். முக்கிய விருந்தினராக இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர்




எஸ். எஸ். வி. ராமகுமார் கலந்து கொண்டார்.

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் வரவேற்புரை ஆற்றினார். விழாவில் முக்கிய விருந்தினராக கலந்து கொண்ட சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எஸ். என். பாண்டே பேசுகையில் பல்வேறு தொழிற்சாலைகளில் எல்.பி.ஜி. பயன்பாடு கூடிவருகின்றது. குறிப்பாக கண்ணாடித் தொழிற்சாலைகளில் தரமான எரிபொருள் தேவைக்காக எல்பிஜி கூடுதல் பயன்பாடாக உள்ளது. தற்போது ஆட்டோ தொழிற்சாலைகளிலும் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. சுற்றுச்சூழல் நலன் நோக்கில் எல்பிஜி தேவை அதிகரித்துள்ளது. என்று பேசினார்.

மேலும் ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர் பி. அசோக் இதன் சிறப்பு குறித்து பேசினார்.

இந்த கருத்தரங்;கை முன்னிட்டு எரிவாயு விழிப்புணர்வு பற்றிய கண்காட்சியும் இந்த வளாகத்தில் ஏற்பாடு நடைபெறுகிறது. விழா முடிவில் பட்டாபிராமன் நன்றி கூறினார். இந்த கருத்தரங்கு இன்றுடன் நிறைவு பெறுகிறது.

# Malai Murasu - 29-2-2020

## கோவையில் எல்.பி.ஜி. எரிவாயு கருத்தரங்கு!

கோவை, பிப். 29–

கோவை சரவணம்பட்டி – துடியலூர் சாலையில் உள்ள ஆதித்யா கன்வென்சன் சென்டரில் நடைபெற்றது.



கவுரவ விருந்தினராக ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் பி. அசோக் கலந்து கொண்டு கருத்தரங்கை குத்து விளக்கு ஏற்றி துவக்கிவைத்தார்.

முக்கிய விருந்தினராக இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் டாக்டர். எஸ். எஸ். வி. ராம்குமார் கலந்து கொண்டார்.

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் வரவேற்று பேசினார்.

முக்கிய விருந்தினராக சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிர்வாக இயக்குனர் எஸ். என். பாண்டே இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் டாக்டர். எஸ். எஸ். வி. ராமகுமார் ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் தலைவர் பி. அசோக் ஆகியோர் பேசினர்.

இந்த கருத்தரங்கை முன்னிட்டு எரிவாயு விழிப்புணர்வு பற்றிய கண்காட்சியும் நடைபெற்றது. முடிவில் பட்டாபிராமன் நன்றி கூறினார்.

## The Hindu - 01-03-2020

# No significant price hike for BS-VI fuels: IOCL Chairman

STAFF REPORTER
COIMBATORE

With the April 1 deadline for migrating to Bharat Stage-VI (BS-VI) grade fuels around the corner, Indian Oil Corporation Limited (IOCL) Chairman Sanjiv Singh said that there will be no "significant" price hike for automotive fuels.

Addressing mediapersons here on Saturday, Mr. Singh said that there will be "positive increase" in fuel price of around one percent. He noted, however, that the BS-VI standard vehicles will cost more as they carry additional devices in comparison with BS-IV standard vehicles.

Tamil Nadu, Karnataka and Rajasthan are some of the States that have rolled out BS-VI standards to a large extent, Mr. Singh said.

With only 10 ppm sulphur content, the emission standards of BS-VI fuels are "as clean as" that of compressed natural gas (CNG), he said.

IOCL refineries have switched over to production of BS-VI fuels at a combined cost of about ₹17,000 crore, he said.

With natural gas constituting only around 6% of India's energy consumption, Mr. Singh said that the Central government aims to increase the share of natural gas to about 15%.

"India is moving towards a gas-based economy," he said, noting that even ineffective usage of natural gas will not amount to polluting the environment.

Regarding the recent announcement of Cauvery delta region being declared as Protected Special Agricultural Zone, Mr. Singh said that the declaration will not affect any IOCL projects as it only disallows oil exploration.

The oil company will set up a 9 million metric tonnes per annum refinery in Nagapattinam, which falls under the zone, he said.

## The Times of India - 01-03-2020

# Indian Oil ready to launch BS6 fuel in TN from April 1

TIMES NEWS NETWORK

**Coimbatore:** Indian Oil Corporation Limited is ready to launch BS6 fuel across the nation, especially in Tamil Nadu, from April 1, said chairman **Sanjiv Singh.**



Speaking to the media on the sidelines of the LPG conclave in the city, Singh allayed fears of the price hike expected during the launch of the less polluting fuel. While he did not specify the quantum of the hike, he said the hike would be marginal. "There will be an increase in retail prices of fuel from April 1. The price is expected it to increase by 1% to 1.5%," he said.

Indian Oil officials said with the new infrastructure in place, the fuel being supplied in Tamil Nadu is already close to B6 standards itself. "However, we plan to officially declare it on April 1," said an official.

Speaking about the benefits BS6 fuels, the chairman said it would have a Sulphur content of only 10 ppm (parts per million) compared to the existing fuels which contain 50 ppm of Sulphur. "The lower Sulphur content in the fuel will allow using advanced after-treatment devices to reduce harmful exhaust emissions like carbon monoxide, hydrocarbons, NOX and other carcinogenic emissions among others," he said. State-run oil marketing companies have invested around ₹35,000 crore to upgrade their refineries to produce this ultra clean fuel, off which IOCL alone has spent ₹17,000 crore.

Meanwhile, Sanjiv Singh presented gifts to prison inmates and supervisors working at the 'Freedom Fuel Station' on Dr Nanjappa Road. Singh said the station was one of the retail outlets operated by Indian Oil Corporation without a business objective. Deputy inspector general, Coimbatore, Shanmuga Sundaram said the freedom station is serving as a rehabilitation platform for prison inmates.

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

## Deccan Chronicle - 01-03-2020

# Use of LPG is on the rise, says CPCL official

**DC CORRESPONDENT**
COIMBATORE, FEB. 29

Use of liquefied petroleum gas (LPG) is on rise, S N Pandey managing director of Chennai Petroleum Corporation Limited (CPCL), said in his address at the national LPG Conclave organised by the Indian Oil Corporation Limited.

The two-day event concluded on Saturday. "Use of LPG is on the rise in various industries, particularly the glass blowing industries followed by automobile industries. The requirement of LPG is on the rise given the importance on maintaining clean environment." he said.

"The aim of the national-level workshop is to assess the growth of LPG in terms of its future utilization," Dr SSV Ramakumar, director of research and development, Indian Oil Corporation said. Awareness on the need to prevent global warming has been created at the world level and the level of global warming can be further brought down with the increased use of LPG. Research should be carried out to convert the carbon dioxide into an alternative source of energy, he added.

Around 55 research papers were submitted at the workshop and the multi-purpose use of LPG was discussed.

# National LPG Conclave 2020



## Dinakaran - 01-03-2020

### இந்தியன் ஆயில் நிறுவன தேசிய கருத்தரங்கம்

கோவை, மார்ச் 1: இந்தியன் ஆயில் நிறுவன 2 நாள் தேசிய கருத்தரங்கம் கோவையில்நேற்றுதுவங்கியது. ரத்னகிரிபைனான்ஸ் பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவன தலைவர் அசோக் சிறப்புவிருந்தினராககலந்துகொண்டு கருத்தரங்கை துவக்கி வைத்தார். இதில், இந்தியன் ஆயில் நிறுவன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் ராம்குமார், இந்தியன் ஆயில் நிறுவன மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன், சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவன நிர்வாக இயக்குனர் பாண்டே உள்பட பலர் கலந்துகொண்டு பேசினர்.




கோவையில் இந்தியன் ஆயில் நிறுவன கண்காட்சியை அசோக் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் நிறுவனத்தின் இயக்குனர் ராம்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## The Kovai Herald - 01-03-2020

### IOCL conducts National Level LPG Conclave 2020

A two-day national level LPG Conclave 2020 organised by the Indian Oil Corporation Limited began at the Aditya convention centre on the Thudiyalur - Saravnampatti Road.

B Ashok, Chairman of Ratnagiri Refineries & Petrochemicals Limited, who was the guest of honour, inaugurated the workshop by lighting the traditional lamp. Dr




SSV Ramakumar, Director of Research & Development, Indian Oil Corporation was the chief guest. P Jeyadevan, Executive Director, IOC, TNSO, welcomed the gathering. He said that 55 research papers have been submitted in the two-day national level workshop.

S N Pandey, Managing Director, Chennai Petroleum Corporation Limited, Dr SSV Ramakumar, Director of Research & Development, Indian Oil Corporation, B Ashok, Chairman of Ratnagiri Refineries & Petrochemicals Limited, were present during the conclave. An awareness exhibition on LPG was also inaugurated in the workshop.

# National LPG Conclave 2020

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

## Dinamani - 01-03-2020

### பிஎஸ்-6 ஆட்டோமேட்டிவ் எரிபொருள்: ஏப்ரல் 1 முதல் விற்பனை

**இந்தியன் ஆயில் நிறுவனம் தகவல்**



கோவையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசுகிறார் இந்தியன் ஆயில் நிறுவனத் தலைவர் சஞ்சீவ் சிங்.

கோவை, பிப். 29: இந்தியன் ஆயில் நிறுவனம் சார்பில் பாரத் ஸ்டேஜ்-6 (bs-6) ஆட்டோமேட்டிவ் எரிபொருள் நாடு முழுவதும் வரும் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் விற்பனை செய்யப்பட உள்ளதாக நிறுவனத் தலைவர் சஞ்சீவ் சிங் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கோவையில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை அவர் கூறியதாவது:

இந்திய எரிபொருள் பேர்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாகனங்களுக்கான மாசுக் கட்டுப்பாட்டு விதிகள் 1990ஆம் ஆண்டு அமல்படுத்தப் பட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன. தற்போதைய (bs-4) விதிகள் 2017ஆம் ஆண்டில் இருந்து நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் மாசு அளவினை கட்டுப்படுத்தும் நோக்கில் (bs-6) எரிபொருள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த எரிபொருள் உலக அளவிலான எரிபொருள் தர அளவீடுகளுக்கு இணையான தகுதியைப் பெற்றுள்ளது. இதில் கந்தகம் வெளியிடும் அளவு 10 பிபிஎம் ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் கார்பன் மோனாக்ஸைடு, ஹைட்ரோ கார்பன்கள் போன்ற நச்சுப் புகையின் வெளியீடும் குறைகிறது.

கந்தகம் வெளியீடு குறைவு என்பதால் பழைய மாடல் வாகனங்களில் இந்த எரிபொருளை பயன்படுத்தும்போது நச்சுப்புகை குறையும். டீசலில் உள்ள பாலி அரோமடிக் ஹைட்ரோ கார்பன்கள் 8 சதவீதமாக குறைகிறது. மற்ற எரிபொருள்களைக் காட்டிலும் (bs-6) வகை எரிபொருள் பல்வேறு விதங்களில் நுகர்வோர்களுக்குப் பயன் தரக் கூடியதாக இருக்கும்.

ஒருங்கிணைக்கப்பட்ட சுத்தமான எரிபொருள்கள் தயாரிப்புத் திட்டத்துக்காக இந்தியன் ஆயில் நிறுவனம் ரூ. 17 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தியன் ஆயில் நிறுவனத்துக்குச் சொந்தமான 9 சுத்திகரிப்பு நிலையங்கள் சார்பில் இவ்வகை எரிபொருள்களுக்கான தயாரிப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நாடு முழுவதும் உள்ள அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களிலும் இத்தகைய எரிபொருள் விற்பனைக்கு கொண்டுவரப்படும்.

இவ்வகை எரிபொருள்களை அனைத்து வாகனங்களுக்கும் உபயோகப்படுத்தலாம். ஆனால் (bs-6) வாகனங்களுக்கு சிறந்த பலன் தரக் கூடியது. மற்ற எரிபொருள்களைக் காட்டிலும் 1- 1.5 சதவீதம் வரை விலை அதிகமாக இருக்கும். இதனால் நுகர்வோர்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது என்றார்.

### "LPG can help in lowering global warming"

The Covai Mail

A two-day national level LPG Conclave 2020 organized by the Indian Oil Corporation Limited began on Friday at the Aditya Convention Centre on Thudiyalur - Saravanampatti Road.

B.Ashok, Chairman of Ratnagiri Refineries & Petrochemicals Limited was the guest of honour, and Dr. SSV Ramakumar, Director of Research & Development, Indian Oil Corporation was the chief guest. 55 research papers have been submitted in the two-day national level workshop.

The aim of this national level workshop is to assess the growth of LPG in terms of its future utilisation said Dr SSV Ramakumar, Director of Research & Development, Indian Oil Corporation. Awareness on the need to prevent global warming has been created at the world level and the level of global warming can be further brought down with the increased use of LPG.

## The Kovai Mail - 01-03-2020

# The Hindu - 01-03-2020

## ஏப்ரல் 1 முதல் பிஎஸ் 6 ரக எரிபொருள் மட்டுமே விற்பனை

### ● இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத் தலைவர் தகவல்

**கோவை**

வரும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள் விற்பனையில், பி.எஸ்.6 ரக எரிபொருள் மட்டுமே விற்பனை செய்யப்படும் என்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத் தலைவர் சஞ்ஜீவ் சிங் கூறினார்.

கோவையில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கூறியதாவது:

சுற்றுச்சூழல் மாசைக் குறைப்பதில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருளில், சுற்றுச்சூழலைப் பாதிக்கும் பொருட்களின் அளவை பெருமளவை குறைத்து, காற்று மாசு ஏற்படாத வகையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இதையொட்டி, கடந்த 2017 ஏப்ரல் மாதம் பி.எஸ்.4 (பாரத் ஸ்டேஜ்) ரக எரிபொருள் அறிமுகம் செய்யப்பட்டது. அடுத்தகட்டமாக பி.எஸ்.6 ரக எரிபொருள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் கந்தகத்தின் (சல்ஃபர்) அளவு மிக மிக குறைவாக இருக்கும். ஏப்ரல் மாதம் முதல் முற்றிலும் பி.எஸ்.6 ரக எரிபொருள் மட்டுமே விநியோகம் செய்யப்படும்.

முன்பு உபயோகப்படுத்தப்பட்ட பி.எஸ்.2 ரக எரிபொருளில் கந்தகத்தின் அளவு 350 பிபிஎம் ஆக இருந்தது. இது பி.எஸ்.4 ரக எரிபொருளில் 50 பிபிஎம்-ஆக குறைக்கப்பட்டது. தற்போது அறிமுகப்படுத்தப்படும் பி.எஸ்.6 ரக எரிபொருளில் கந்தகத்தின் அளவு 10 பிபிஎம் மட்டுமே இருக்கும். பி.எஸ்.6 ரக இன்ஜின்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மட்டுமே விற்பனை செய்யப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளதால், சுற்றுச்சூழல் பாதிப்பு வெகுவாகக் குறையும் என்பதில் சந்தேகமில்லை.

தற்போதுள்ள பி.எஸ்.4 ரக எரிபொருளை, பி.எஸ்.6 ரக எரிபொருளாக மாற்றுவதற்கான கட்டமைப்புகளை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் சுத்திகரிப்பு ஆலைகளில் மேற்கொண்டுள்ளோம். சென்னையில் ஏற்கெனவே பி.எஸ்.6 ரக எரிபொருள் விற்பனையைத் தொடங்கி விட்டோம்.



▲ கோவையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத் தலைவர் சஞ்சீவ் சிங் பேசுகிறார். உடன் (இடமிருந்து) செயல் இயக்குநர் அரூப் சின்ஹா, இயக்குநர் குர்மீத் சிங். படம்: ஆர்.கிருஷ்ணகுமார்

**தரச் சான்றிதழ்**

எனினும், அதற்கான தரச் சான்றிதழ் அளிக்கவில்லை. ஏப்ரல் மாதத்துக்குள் தரச் சான்றிதழ் அளிக்கப்படுவதுடன், பி.எஸ்.6 ரக எரிபொருள் மட்டுமே விற்கப்படும் என்ற அறிவிப்பும் வெளியாகிவிடும்.

சர்வதேச தரத்திலான பி.எஸ்.6 ரக எரிபொருள் உற்பத்திக்காக இந்தியாவில் உள்ள எண்ணெய் நிறுவனங்கள் சுமார் ரூ.35 ஆயிரம் கோடி செலவு செய்துள்ளன. நாட்டின் மொத்த எரிபொருள் சந்தையில் 44 சதவீதம் வைத்துள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மட்டும் ரூ.17 ஆயிரம் கோடி செலவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம் மூலமாகவே இந்த மாற்றங்களைச் செய்துள்ளோம்.

**விலை உயர்வு இருக்காது**

பி.எஸ்.6 ரக எரிபொருள் அறிமுகம் காரணமாக, பெட்ரோல், டீசல் விலையில் பெரிய அளவுக்கு உயர்வு இருக்காது. சுமார் ஒரு

சதவீதம் உயர்வு இருக்கலாம். ஆட்டோமொபைல் தொழிலில் ஏற்பட்ட பிரச்சினைகள், பெட்ரோல், டீசல் விற்பனையை பெரிய அளவுக்குப் பாதிக்கவில்லை. நடப்பாண்டு இறுதிக்குள் பெட்ரோல், டீசல் விற்பனை இன்னும் அதிகரிக்கும் என்று நம்புகிறோம்.

இந்தியாவைப் பொறுத்தவரை சமையல் காஸ் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருகிறது. தற்போது இந்தியாவில் பயன்படுத்தப்படும் எரிவாயுவில் 50 சதவீதத்தை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறோம். மத்திய, மாநில அரசுகளுடன் இணைந்து, விவசாயிகள் உள்ளிட்ட யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் எரிவாயு உற்பத்தியை மேற்கொண்டு வருகிறோம்.

தற்போது மொத்த எரிவாயு பயன்பாட்டில், இயற்கை எரிவாயுவின் பங்களிப்பு 6 சதவீதமாக உள்ளது. இதை 15 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

காவிரி டெல்டா பகுதிகள், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றப்படும் என தமிழக அரசு அண்மையில் அறிவித்துள்ளது. புதிதாக எரிவாயு பகுதிகளை கண்டுபிடிக்கும் திட்டத்துக்கு மட்டும் இந்த அறிவிப்பு பாதிப்பை ஏற்படுத்தும். ஏற்கெனவே உள்ள திட்டங்களுக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது. பைப்லைன் மூலம் எரிவாயு கொண்டு செல்லும் திட்டங்களிலும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

ஐஓசி செயல் இயக்குநர்கள் ஜெயதேவன், அரூப் சின்ஹா, இயக்குநர் குர்மீத் சிங், பொது மேலாளர் ஆர்.சிதம்பரம் உடன் இருந்தனர்.

# Makkal Kural - 01-03-2020

## ஏப்., முதல் 'பி.எஸ்., 6' ரக எரிபொருள் வினியோகம்

### இந்தியன் ஆயில் சேர்மன் தகவல்

**கோவை, மார்ச் 1 –**

''நாடு முழுவதும் ஏப்., மாதம் முதல் பி.எஸ்., 6 ரக எரிபொருள் வினியோகம் செய்யப்படும்,'' என, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சேர்மன் சஞ்ஜிவ் சிங் கூறினார்.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சேர்மன் சஞ்ஜிவ் சிங் கோவையில் நிருபர்களிடம் கூறியதாவது:

கடந்த, 2017 ஏப்ரலில் பி.எஸ்.,(பாரத் ஸ்டேஜ்) 4 ரக எரிபொருள் அறிமுகம் செய்யப்பட்டது. தொடர்ந்து, வரும் ஏப்., மாதம் முதல் பி.எஸ்., 6 ரக எரிபொருளை எண்ணெய் நிறுவனங்கள் வினியோகம் செய்யவுள்ளன.

எரிபொருளில் இருக்கும் 'சல்பர்' அளவுக்கேற்ப காற்றில் மாசுபாடு ஏற்படுகிறது.

பி.எஸ்., 2 ரக எரிபொருளில்(பெட்ரோல், டீசல்) காற்றில் இருக்கும் சல்பர் அளவுகோல், 350 பார்ட்ஸ் பெர் மில்லியன்(பி.பி.எம்.,) ஆக இருந்தது.

பி.எஸ்., 4 ரக எரிபொருளில், 50 பி.பி.எம்., ஆக சல்பர் அளவு குறைக்கப்பட்டது.

பி.எஸ்., 6 ரக எரிபொருளில் சல்பர் அளவு, 10 பி.பி.எம்., ஆக இருக்கும் என்பதால் காற்றின் மாசுபாடு மேலும் குறைக்கப்படும்.



■ சஞ்ஜிவ் சிங்

சென்னையில் ஏற்கனவே பி.எஸ்., 6 ரக எரிபொருள் விற்பனையை துவங்கிவிட்டோம்; ஆனால், தரச்சான்றிதழ் அளிக்கவில்லை. வரும் ஏப்., மாதத்துக்கு முன்பு இதற்கான அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பி.எஸ்., 4 ரக எரிபொருளும் சர்வதேச தரத்திலானதுதான். எண்ணெய் நிறுவனங்கள் அனைத்தும் பி.எஸ்., 4 ரக எரிபொருளை பி.எஸ்., 6 ரகமாக கொண்டுவர, 35 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. அதில், இந்தியன் ஆயில் நிறுவனம் மட்டும், 17 ஆயிரம் கோடி செலவு செய்துள்ளது.

அதுவும் உள்நாட்டு தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மூலமாகவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது பெரிய சாதனை.

பெட்ரோல், டீசல் விற்பனை மந்தமாக இருக்க பருவநிலை மாற்றமும் காரணமாக அமைகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் விற்பனை அதிகரிக்கும். மாசுபாடு காரணமாக அனைவரும் எரிவாயு பயன்பாட்டுக்கு மாறி வருகின்றனர். வெளிநாடுகளில் இருந்து, 50 சதவீதம் எரிவாயு இறக்குமதி செய்யப்படும் நிலையில் உள்நாட்டிலேயே உற்பத்திக்கு முக்கியத்துவம் தரப்படும்.

வட – கிழக்கு மாநிலங்களில், 2,400 கி.மீ., துாரத்துக்கு 'ஊர்ஜ கங்கா' எனும் பெரிய பைப்லைன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்கள் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக இந்தியன் ஆயில் நிறுவனம் செயல்பட்டுவருகிறது.

இவ்வாறு, அவர் கூறினார்.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி செயல் இயக்குனர் ஜெயதேவன், பொது மேலாளர் சிதம்பரம், இயக்குனர்(மார்க்கெட்டிங்) குர்மீத் சிங் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## எரிபொருள் விலை குறையாதது ஏன்?

### ஐ.ஓ.சி., தலைவர் சஞ்ஜிவ் சிங் விளக்கம்

**கோவை, மார்ச் 1–**

''சர்வதேச விலையுடன் பெட்ரோல், டீசல் விலை நிர்ணயிக்கப்பட்டு வந்தாலும், தற்போது ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே, இந்தியாவில் எரிபொருள் விலையில் பெரும் மாறுதல் இல்லை,'' என, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் தலைவர் சஞ்ஜிவ் சிங் கூறினார்.

கோவை, சரவணம்பட்டியில் இரண்டு நாள், 'தேசிய அளவிலான எல்பிஜி மாநாடு 2020' நேற்று நிறைவு பெற்றது.

விழாவில், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் தலைவர் சஞ்ஜிவ் சிங் பேசுகையில், ''இதுவரை வீடுகளில் சமையலுக்கு மட்டுமே பயன்படுத்தி வந்த எல்.பி.ஜி., காஸ், வணிக அளவிலும் விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளது. தொழிற்சாலைகளில் மட்டுமின்றி, போக்குவரத்திலும் பயன்படுத்துவதால், சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவது குறையும்,'' என்றார்.

பின், அவர் நிருபர்களிடம் கூறுகையில், ''சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

சர்வதேச விலையுடன் பெட்ரோல், டீசல் விலை நிர்ணயிக்கப்பட்டு வந்தாலும், தற்போது ரூபாயின் மதிப்பும் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே, இந்தியாவில் எரிபொருள் விலையில் பெரும் மாறுதல் இல்லை.

இந்தியாவின் எதிர்கால பொருளாதாரம் இயற்கை எரிவாயு பொருளாதாரமாக மாறும். எரிவாயு நிரப்பும் பங்க்குகளின் எண்ணிக்கை, அடுத்த சில ஆண்டுகளில், 10 ஆயிரமாக அதிகரிக்கப்படும்,'' என்றார்.

நிறைவு விழாவில், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் இயற்கை எரிவாயு பிரிவு செயல் இயக்குனர் சுனில் மாத்துார், சந்தை பிரிவு தலைவர் குர்மித்சிங், சென்னை மண்டல தலைவர் ஜெயதேவ், 'கொடிசியா' தலைவர் ராமமூர்த்தி, 'கொச்சின் ரிபைனரீஸ்' தலைவர் முரளிமாதவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# National LPG Conclave 2020

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying • Media Planning • Rural Marketing

## New Indian Times - 02-03-2020

### இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு



கோவை,மார்ச்,02.

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் தேசிய அளவிலான 2 நாள் கருத்தரங்கு கோவையில் நடந்தது. கவுரவ விருந்தினராக ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் அசோக் கலந்து கொண்டு கருத்தரங்கை குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

முக்கிய விருந்தினராக இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் டாக்டர். எஸ். எஸ். வி. ராம குமார் கலந்து கொண்டார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் வரவேற்று பேசினார். இப்போது அவர் இந்த தேசிய அள விலான கருத்தரங்கில் 55 ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விழாவில் முக்கிய விருந்தினராக சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் பாண்டே கலந்து கொண்டு பேசினர்.

விழா முடிவில் பட்டாபிராமன் நன்றி கூறினார்.

## Mathruboomi - 02-03-2020

### ഗ്യാസ് ഓട്ടോ ഉപയോഗം: കേരളം മുന്നിൽ

**കോയമ്പത്തൂർ ▸** എൽ.പി.ജി. ഉപയോഗിച്ച് ഏറ്റവുമധികം ഓട്ടോറിക്ഷകൾ ഓടിക്കുന്നത് കേരളത്തിലാണെന്ന് രത്നഗിരി റിഫൈനറീസ് ആൻഡ് പെട്രോകെമിക്കൽസ് ലിമിറ്റഡ് ചെയർമാൻ ബി. അശോക് പറഞ്ഞു.

ആദ്യത്തെ എൽ.പി.ജി. സ്റ്റേഷൻ കൊച്ചിയിലാണ് തുടങ്ങിയത്. ഇന്ന് ഒട്ടേറെ സ്റ്റേഷനുകൾ കേരളത്തിലുണ്ട്. അന്തരീക്ഷമലിനീകരണം ഒഴിവാക്കാൻ സഹായകമാണ് എൽ.പി.ജി. ഇന്ധനം ഉപയോഗിച്ചുള്ള വാഹനം ഓടിക്കൽ.

ഇപ്പോൾ എൽ.പി.ജി. ഓട്ടോകൾ കർണാടകയിലും സുലഭമാണ്. കോയമ്പത്തൂരിൽ രണ്ടുദിവസമായി നടന്നുവരുന്ന ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷൻ 'ദേശീയ കോൺക്ലേവ്-2020'ന്റെ ഭാഗമായി നടത്തിയ പ്രദർശനം ഉദ്ഘാടനം ചെയ്യുകയായിരുന്നു അദ്ദേഹം.

ഓട്ടോനിരക്ക് നിബന്ധന കർശനമാക്കിയതോടെ യാത്രക്കാരുടെ ഓട്ടോ ഉപയോഗം വർധിച്ചതായും ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷൻ റിസർച്ച് ആൻഡ് ഡെവലപ്പ്മെന്റ് ഡയറക്ടർ ഡോ. എസ്.എസ്.വി. രാമകുമാർ അവതരിപ്പിച്ച പ്രബന്ധത്തിൽ ചൂണ്ടിക്കാട്ടി.

വിവിധ വ്യവസായങ്ങളിലും എൽ.പി.ജി. ഗ്യാസ് ഉപഭോഗം വർധിപ്പിച്ചതായി ചെന്നൈ പെട്രോളിയം കോർപറേഷൻ മാനേജിങ് ഡയറക്ടർ എസ്.എൻ. പാണ്ഡെ വ്യക്തമാക്കി.



▶ കോയമ്പത്തൂരിൽ ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷൻ ദേശീയ കോൺക്ലേവിനോടനുബന്ധിച്ച് നടന്ന പ്രദർശനത്തിൽ വെച്ച ഗ്യാസ് സിലിൻഡറുകൾ

ഗ്ലാസ് ഗ്ലോവിങ് വ്യവസായത്തിലും ഓട്ടോമൊബൈൽ വ്യവസായത്തിലും ഉയർന്ന നിലവാരമുള്ള എൽ.പി.ജി.യാണ് ഉപയോഗിക്കുന്നത്. ഇതെല്ലാം അന്തരീക്ഷമലിനീകരണം ഒഴിവാക്കുന്നവയാണ്.

# National LPG Conclave 2020

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

## The Hindu - 03-03-2020

# 'Use of liquid energy sources should be improved to tackle climate change'

**STAFF REPORTER**
COIMBATORE

The Tamil Nadu State Office of Indian Oil Corporation Limited (IOCL) organised a two-day National LPG Conclave here on Friday and Saturday to discuss the possibilities of diverse applications of liquefied petroleum gas (LPG).

The conclave was held at Adithya Convention Centre in Saravanampatti. B. Ashok, chairman of Ratnagiri Refineries and Petrochemicals Limited, was the guest of honour who inaugurated the event on Friday. S.S.V. Ramakumar, Director of Research and Development, Indian Oil Corporation, was the chief guest.

In his address, P. Jeyadevan, Executive Director, Tamil Nadu State Office of IOCL, said that 55 research papers were submitted for the conclave. S.N. Pandey, managing director, Chennai Petroleum Corporation Limited, said the use of LPG was on the rise in various industries, particularly the glass blowing industries and automobile industries.

Mr. Ramakumar said that while carbon was the cheapest and richest source of energy, carbon emissions must be controlled.

"Carbon dioxide needs to be effectively capped and gainfully converted to value added products," he said. The technical sessions assessed the growth of LPG in terms of its future utilisation.

"The exploration for new avenues in the use of energy will be more useful for the country's economic growth," Mr. Ashok said.

The use of liquid energy sources should be improved to tackle climate change, he said, urging that quality LPG kits should be produced to be used in old vehicles. Mr. Ashok also called for implementing digital technology in the auto LPG sector.

On Saturday, BPCL-Kochi Refinery unit head Murali Madhavan said the usage of LPG was increasing in the automobile sector. Gurmeet Singh, IOCL Marketing Director, said the oil company was focusing on introducing new technologies in LPG distribution.

IOCL Chairman Sanjiv Singh, who was the chief guest for the second day, said in the future of LPG was "bright in India." IOCL would redress the grievances of its customers at the earliest, he said, according to a release.

Nearly 1,000 delegates participated in seven technical sessions and workshops that focused on the non-domestic applications of LPG. An awareness exhibition on LPG was also inaugurated at the event.

## Hindu Tamil - 03-03-2020




▲ கோவையில் நடைபெற்ற தேசிய அளவிலான எல்.பி.ஜி. மாநாட்டில், சிறந்த அரங்குகளை வடிவமைத்திருந்த ஐஓசி அதிகாரிகளுக்கு விருது வழங்கிய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத் தலைவர் சஞ்சீவ் சிங்.

# தேசிய அளவிலான எல்.பி.ஜி. மாநாடு நிறைவு

■ கோவை

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் சார்பில் கோவையில் நடைபெற்ற தேசிய அளவிலான திரவ பெட்ரோலியம் எரிவாயு (எல்.பி.ஜி.) எரிவாயு மாநாடு நிறைவடைந்தது.

கோவை சரவணம்பட்டியில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவு விழாவில், செயல் இயக்குநர் சுனில் மாத்தூர் வரவேற்றார்.

அவர் பேசும்போது, "சமையல் எரிவாயு தாண்டி, பிற தொழில் துறைகளில் திரவ பெட்ரோலிய எரிவாயுவை விரிவாக்குவது குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. சர்வதேச அளவில் எல்.பி.ஜி. உற்பத்தியில் இந்தியா 6-வது இடத்திலும், நுகர்வில் 3-வது இடத்திலும் உள்ளது. எனவே, உற்பத்தியை அதிகரிப்பது குறித்து பல்வேறு விவாதங்கள் நடத்தப்பட்டன" என்றார்.

கொச்சியில் உள்ள சுத்திகரிப்பு ஆலை செயல் இயக்குநர் முரளி மாதவன் பேசும்போது, "இந்த மாநாட்டில் புவி வெப்பமயமாதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் ஐஓசி-யின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. ஆட்டோமொபைல் துறையிலும் எல்.பி.ஜி.யின் பங்கு ஏற்றம் கொண்டு வருகிறது" என்றார்.

ஐஓசி இயக்குநர் (மார்க்கெட்டிங்) குர்மீத் சிங் பேசும்போது, "எரிவாயு விநியோகத்தில் நவீன தொழில்நுட்பத்தை புகுத்துவதில் ஐஓசி மிகுந்த கவனம் செலுத்துகிறது" என்றார்.

சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத் தலைவர் சஞ்சீவ் சிங் பேசும்போது, "இந்தியப் பொருளாதாரத்தில் எல்.பி.ஜி.யின் பங்கு அதிகம் உள்ளது. எல்.பி.ஜி.யின் எதிர்காலமும் சிறப்பாக உள்ளது. நவீனத் தொழில்நுட்பம், விநியோகஸ்தர்களின் நல்ல ஒத்துழைப்பு ஐஓசி-யின் வளர்ச்சிக்கு உதவுகிறது. வாடிக்கையாளர்களுக்கான வசதிகளை பூர்த்தி செய்து, அவர்களை தக்க வைத்துக் கொள்வதில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும்" என்றார். ஐஓசி செயல் இயக்குநர் ஜெயதேவன் நன்றி கூறினார். எல்.பி.ஜி. மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கண்காட்சியில் சிறந்த அரங்குகளை வடிவமைத்த அலுவலர்களுக்கு, நிறுவனத் தலைவர் சஞ்சீவ் சிங் பரிசு வழங்கினார்.

# National LPG Conclave 2020

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

## Dinakaran - 03-03-2020

# நாடு முழுவதும் ஏப்.1 முதல் பாரத் ஸ்டேஜ்-6 எரிபொருள்

### இந்தியன் ஆயில் நிறுவன கருத்தரங்கில் தகவல்

**கோவை, மார்ச் 3:** இந்தியன் ஆயில் நிறுவனம் சார்பில் தேசிய அளவிலான எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு கோவை சரவணம்பட்டி பகுதியில் கடந்த 2 நாட்களாக நடந்தது. இதில், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவன தலைவர் சஞ்சீவ் சிங் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். அவர் பேசுகையில், "சுத்தமான எரிபொருள் திட்டத்திற்காக ரூ.17 ஆயிரம் கோடி செலவில் பாரத் ஸ்டேஜ்-6 என்ற எரிபொருள் தயாரிப்பிற்கு இந்தியன் ஆயில் சுத்திகரிப்பு நிலையங்கள் மாறிவிட்டன. பாரத் ஸ்டேஜ்-6 திட்டத்தை நடைமுறைப்படுத்துவது முழுமை பெற்றுவிட்டது. வரும் ஏப்ரல் 1ம் தேதிக்குள் நாடு முழுவதும் பாரத் ஸ்டேஜ்-6 எரிபொருள் சப்ளை வாடிக்கையாளர் கையில் சேர்க்கப்படும்" என்றார். கருத்தரங்கில், ரத்னகிரி ரிபைனரிஸ் அண்ட் பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவன தலைவர் அசோக், இந்தியன் ஆயில் நிறுவன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் ராம்குமார், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் எல்பிஜி செயலாக்க இயக்குனர் சுனில் மாத்தூர், கொச்சி, ரீபைனரி செயல் இயக்குனர் முரளி மாதவன், இந்தியன் ஆயில் நிறுவன மார்க்கெட்டிங் இக்குனர் குர்மீத் சிங், இந்தியன் ஆயில் நிறுவன தமிழ்மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் உள்பட பலரும் பேசினர்.

## Makkal Mugam - 03-03-2020

# நாடு முழுவதும் பாரத் ஸ்டேஜ் 6 எரிபொருள் சப்ளையை கொண்டு சேர்க்க இந்தியன் ஆயில் நிறுவனம் உறுதி

**கோவை, மார். 3**

கோவையில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் 28 மற்றும் 29 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற தேசிய அளவிலான எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு நிறைவுபெற்றது.

இந்த கருத்தரங்கு கோவை சரவணம்பட்டி - துடியலூர் சாலையில் அமைந்துள்ள ஆதித்யா கன்வென்சன் சென்டரில் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற துவக்க விழாவில் ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் அசோக், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் ராமகுமார் ஆகியோர் கலந்து கொண்டு மாநாட்டை துவக்கிவைத்தனர். துவக்கவிழாவை தொடர்ந்து தொழில்நுட்ப கருத்தரங்குகள் நடைபெற்றன.

இரண்டாவது நாள் நடைபெற்ற நிறைவு விழாவிற்கு வந்திருந்தவர்களை இந்தியன் ஆயில் நிறுவனத்தின் எல்பிஜி செயலாக்க இயக்குனர் சுனில் மாத்தூர் வரவேற்று பேசினார்:- கொச்சி, ரீபைனரி செயல் இயக்குனர், முரளி மாதவன், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் இயக்குனர் குர்மீத் சிங் சிறப்புரையாற்றினார்.



சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாநாட்டின் நிறைவு விழாவில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் சஞ்சீவ் சிங் பேசும்போது, ஏப்ரல் 1,2020 என்ற கடைசி தேதிக்குள் நாடு முழுவதும் பாரத் ஸ்டேஜ்-6 எரிபொருள் சப்ளையை வாடிக்கையாளருக்கு கொண்டு சேர்க்கும் வண்ணம் விநியோக கட்டமைப்புடன் தயாராக இருப்பதில் இந்நிறுவனம் உறுதியாக உள்ளது. தற்போது மொத்த எரிவாயு பயன்பாட்டில், இயற்கை எரிவாயுவின் பங்களிப்பு 6 சதவீதமாக உள்ளது.

இதை 15 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மக்களின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதில் இந்தியன் ஆயில் நிறுவனம் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகிறது. என்று பேசினார்.

விழாவில் சிறந்த கண்காட்சியாளருக்கு விருது வழங்கப்பட்டது. விழா முடிவில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் கருத்தரங்கில் கலந்து கொண்ட அன்னவருக்கும் நன்றி கூறினார்.

# National LPG Conclave 2020

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

## Namathu Murasu - 03-03-2020

### கோவையில் இந்தியன் ஆயில் சார்பில் தேசிய அளவிலான எல்.பி.ஜி. எரிவாயு கருத்தரங்கு

கோயம்புத்தூர், மார்ச். 1- இந்தியன் ஆயில் நிறுவனம் சார்பில் கோவையில் தேசிய அளவிலான எல்.பி.ஜி. எரிவாயு குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

கோவை சரவணம்பட்டி-துடியலூர் சாலையில் அமைந்துள்ள ஆதித்யா கன்வென்சன் சென்டரில் இதன் தொடக்க விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் அசோக் கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.



விழாவில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் டாக்டர் ராமகுமார், இந்தியன் ஆயில் செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

டாக்டர். ராமகுமார் பேசுகையில், எதிர்காலப் பயன்பாட்டு நோக்கில் எல்.பி.ஜி.யின் வளர்ச்சியைக்கணித்தல் இந்த கருத்தரங்கின் நோக்கமாகும். புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்துவதில் உலகம் முழுக்கவே விழிப்புணர்வு உருவாகியுள்ளது. எல்.பி.ஜி. மூலம் புவி வெப்பமயமாவதை குறைக்க இயலும். கார்பன்டை ஆக்சைடு வாயுவை மாற்று சக்தியாக மாற்றி பயன்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 2040-ல் பயோ எல்.பி.ஜி. உருவாக்கம் முழு வீச்சில் அமைய, தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. எல்.பி.ஜி. பயன்பாட்டில் டி கார்பனைசேஷன் தொடர்பான ஆய்வுகள் தீவிரமாக நடைபெறுகின்றன என்றார்.

ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் அசோக் பேசுகையில், இன்றைக்கு உண்ணும் உணவை வழங்குவதில் எல்.பி.ஜி. முன்னணியில் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் எல்.பி.ஜி. விற்பனை அசுர வளர்ச்சி பெற்றுள்ளது. எரிசக்தி வளர்ச்சியில் புதிய வாய்ப்புகளைக் கண்டறிவது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக உதவியாக அமையும்.

கேரளாவில் நிறைய ஆட்டோ எல்.பி.ஜி. நிலையங்கள் உள்ளன. கொச்சியில் முதலாவதாக தொடங்கிய ஆட்டோ எல்.பி.ஜி. நிலையங்கள் தற்போது, கேரளா, கர்நாடகா மாநிலங்களில் பரவலாக்கப்பட்டுள்ளன.இந்த கருத்தரங்கை முன்னிட்டு எரிவாயு விழிப்புணர்வு பற்றிய கண்காட்சியும் இந்த வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முடிவில் பட்டாபிராமன் நன்றி கூறினார்.

## Thinaboomi - 03-03-2020

### நாடு முழுவதும் பாரத் ஸ்டேஜ்-6 எரிபொருள் சப்ளை செய்ய இந்தியன் ஆயில் நிறுவனம் உறுதி

**கோவை, மார்ச் 3**

கோவையில் இந்தியன் ஆயில் நிறுவனம் சார்பில் அகில இந்திய மாநாடு நடைபெற்றது. இதன் நிறைவு விழாவிற்கு வந்திருந்தவர்களை இந்தியன் ஆயில் நிறுவனத்தின் எல்பிஜி செயலாக்க இயக்குனர் சுனில் மாத்தூர் வரவேற்று பேசினார். கொச்சி, ரீபைனரி செயல் இயக்குனர், முரளி மாதவன், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் இக்குனர் குர்மீத் சிங் ஆகியோர் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாநாட்டின் நிறைவு விழாவில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் சஞ்சீவ் சிங் பேசும் போது - இந்த இரண்டு நாள் மாநாடு மிகச் சிறப்பான நடைபெற்றது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இதை ஏற்பாடு செய்த அனைவரையும் வாழ்த்துகிறேன். எல்பிஜியின் எதிர்காலம் இந்தியாவில் சிறப்பாக உள்ளது. நவீன தொழில்நுட்பம், விநியோகஸ்தர்களின் நல்ல ஒத்துழைப்பு ஐஓசியின் வளர்ச்சிக்கு உதவுகிறது. வசதிகளை பூர்த்தி செய்து தக்க வைத்துக் கொள்வதில் முழு ஈடுபாட்டோடு இருக்கவேண்டும். வாடிக்கையாளர்களின் எந்த பிரச்சனைக்கும் தீர்வு தருவதில் இந்தியன் ஆயில் நிறுவனம் சிறந்த ஒத்துழைப்பை வழங்கும் தற்போது மொத்த எரிவாயு பயன்பாட்டில், இயற்கை எரிவாயுவின் பங்களிப்பு 6 சதவீதமாக உள்ளது. இதை 15 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.புதிதாக எரிவாயு பகுதிகளை கண்டுபிடிக்கும் திட்டத்துக்கு மட்டும் இந்த அறிவிப்பு பாதிப்பை ஏற்படுத்தும். ஏற்கெனவே உள்ள திட்டங்களுக்கு எவ்விதப் பாதிப்பும் இருக்காது. பைப்லைன் மூலம் எரிவாயு கொண்டுசெல்லும் திட்டங்களிலும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது. மக்களின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதில் இந்தியன் ஆயில் நிறுவனம் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகிறது. என்று பேசினார்.விழாவில் சிறந்த கண்காட்சியாளருக்கு விருது வழங்கப்பட்டது. விழா முடிவில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் நன்றி கூறினார்.

# National LPG Conclave 2020

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

## Vil Murasu - 03-03-2020



### இந்தியன் ஆயில் சார்பில் கோவையில் தேசிய அளவிலான

### எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு

கோயம்புத்தூர், மார்ச், 03 : இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் கோவையில் தேசிய அளவிலான எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு நடைபெற்றது..

கோவை சரவணம்பட்டி – துடியலூரர் சாலையில் அமைந்துள்ள ஆதித்யா கன்வென்சன் சென்டரில் இதன் தொடக்க விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் பி. அசோக் கலந்து கொண்டு கருத்தரங்கை தொடக்கி வைத்தார். விழாவில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் டாக்டர். எஸ். எஸ். வி. ராமகுமார், இந்தியன் ஆயில் செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினார்.

டாக்டர். எஸ். எஸ். வி. ராமகுமார் பேசும் போது : எதிர்காலப் பயன்பாட்டு நோக்கில், எல்பிஜியின் வளர்ச்சியைக் கணித்தல் இந்த கருத்தரங்கின் நோக்கமாகும். புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்துவதில் உலகம் முழுக்கவே விழிப்புணர்வு உருவாகியுள்ளது. எல்பிஜி மூலம் புவி வெப்பமயமாவதை குறைக்க இயலும். கார்பன்டைஆக்சைடு வாயுவை மாற்று சக்தியாக மாற்றி பயன்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 2040ல் பயோ எல்பிஜி உருவாக்கம் முழு வீச்சில் அமைய, தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. எல்பிஜி பயன்பாட்டில் டிகார்பனைசேஷன் தொடர்பான ஆய்வு கள் தீவிரமாக நடைபெறுகின்றன என்றார்.

ரத்னகிரி ரிபை னரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் பி. அசோக் பேசும் போது : இன்றைக்கு உண்ணும் உணவை வழங்குவதில் எல்பிஜி முன்னணியில் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் எல்பிஜி விற்பனை அசுர வளர்ச்சி பெற்றுள்ளது. எரிசக்தி வளர்ச்சியில் புதிய வாய்ப்புகளைக் கண்டறிவது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக உதவியாக அமையும். கேரளாவில் நிறைய ஆட்டோ எல்பிஜி நிலையங்கள் உள்ளன. கொச்சியில் முதலாவதாக தொடங்கிய ஆட்டோ எல்பிஜி நிலையங்கள் தற்போது, கேரளா, கர்நாடகா மாநிலங்களில் பரவலாக்கப்பட்டுள்ளன. இந்த கருத்தரங்கை முன்னிட்டு எரிவாயு விழிப்புணர்வு பற்றிய கண்காட்சியும் இந்த வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முடிவில் பட்டாபிராமன் நன்றி கூறினார்.

## Deccan Chronicle 04.03.2020

# BS-VI compliant fuels from April 1: IOCL

S. KATHTHASAMI | DC
COIMBATORE, MARCH 3

A national-level 'LPG Conclave 2020' organised by the IndianOil Corporation Limited (IOCL), held in Coimbatore evoked a tremendous response from customers and other stakeholders.

Mr Sanjiv Singh, Chairman, IOCL, speaking at the valedictory said that in India, the use of LPG for cooking purposes has been on the rise. "LPG is ideal for maintaining a clean environment compared to the use of firewood, coal and diesel. At present, we have been importing 50 per cent of our LPG requirements. Hence, we have been trying to increase domestic production of LPG."

He further said, "LPG has a bright and promising future in India.

**● We have been trying to increase domestic production of LPG: Mr Sanjiv Singh, Chairman, IOCL**

Modern technology and the unflinching cooperation extended by the distributors' fuel the growth of Indian Oil Corporation. We should be fully involved in retaining the existing facilities. IOC will always be first to redress the grievances of its valued customers."

He noted that IndianOil, along with other oil marketing companies is rolling out Bharat Stage-VI (BS-VI) automotive fuels across the country by April 1, 2020.

IndianOil refineries have switched over to the production of BS-VI fuels by implementing clean fuel projects at combined cost of about ₹17,000 crore across the country.

According to him, all bulk storage terminals and depots have already achieved conversion from BS-IV to BS-VI fuels. In the markets catered to by them, testing of nozzle samples at petrol pumps is in progress pan-India to ensure complete switch over.

B Ashok, chairman of Ratnagiri Refineries and Petrochemicals Limited, inaugurated the two-day days workshop in the presence of SSV Ramakumar, director, Research and Development, IndianOil Corporation. Sunil Mathur, Executive (LPG), director, IOC, explained the conclave's significance. Murali Madhavan, executive director, Kochi Refineries, spoke on uses of LPG.

## Madhyamam 04.03.2020

# എൽ.പി.ജി ആഭ്യന്തര ഉൽപാദനം കൂട്ടും –ഐ.ഒ.സി.എൽ ചെയർമാൻ

**● എൽ.പി.ജി ദേശീയ കോൺക്ലേവ് സമാപിച്ചു**

**കോയമ്പത്തൂർ:** രാജ്യത്തെ എൽ.പി.ജി ആഭ്യന്തര ഉൽപാദനം കൂട്ടാൻ നടപടി സ്വീകരിച്ചതായി ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷൻ ലിമിറ്റഡ് (ഐ.ഒ.സി.എൽ) ചെയർമാൻ സഞ്ജീവ് സിങ് അറിയിച്ചു.

നിലവിൽ 50 ശതമാനത്തോളം ഇറക്കുമതിചെയ്താണ് ആവശ്യം നിറവേറ്റുന്നതെന്നും അദ്ദേഹം പറഞ്ഞു. ഐ.ഒ.സി.എൽ ആഭിമുഖ്യ




ത്തിൽ ശരവണംപട്ടിയിൽ സംഘടിപ്പിച്ച ദേശീയ ദ്വിദിന എൽ.പി.ജി ദേശീയ കോൺക്ലേവ് സമാപന സമ്മേളനം ഉദ്ഘാടനം ചെയ്യുകയായിരുന്നു അദ്ദേഹം.

ഉദ്ഘാടന സമ്മേളനത്തിൽ രത്നഗിരി റിഫൈനറീസ് ആൻഡ് പെട്രോ കെമിക്കൽസ് ലിമിറ്റഡ് ചെയർമാൻ ബി. അശോക് മുഖ്യാതിഥിയായിരുന്നു. ഐ.ഒ.സി ഡയറക്ടർ ഡോ. എസ്.എസ്.വി. രാമകുമാർ അധ്യക്ഷത വഹിച്ചു. എട്ടു സാങ്കേതിക സെഷനുകളിലായി നടന്ന ശിൽപശാലയിൽ വിദഗ്ധർ ക്ലാസെടുത്തു. എൽ.പി.ജി ബോധവത്കരണ പ്രദർശനവും ഒരുക്കിയിരുന്നു.

ALMEDIA
(AN ASSOCIATE OF ALAKNANDA GROUP)
• Public Relations • Event Management • Media Buying
• Media Planning • Rural Marketing

## Tamil Sudar 04.03.2020

# நாடு முழுவதும் பாரத் ஸ்டேஜ்-6 எரிபொருள் சப்ளை செய்ய இந்தியன் ஆயில் நிறுவனம் உறுதி




கோவை, மார்ச்.04-

கோவையில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார் பில் தேசிய அளவிலான எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு இரண்டு நாட் கள் நடைபெற்றது.

கோவை சரவணம்பட்டி -துடியலூர் சாலையில் அமைந்துள்ள ஆதித்யா கன்வென்சன் சென்டரில் நடைபெற்றது. மாநாட்டில் தொழில்நுட்ப கருத்தரங் குகள் நடைபெற்றன.

இரண்டாவது நாள் நடை பெற்ற நிறைவு விழாவில் இந்தியன் ஆயில் நிறுவனத் தின் எல்பிஜி செயலாக்க இயக்குனர் சுனில் மாத்தூர் வரவேற்புரை ஆற்றி பேசிய தாவது :-

சமையல் எரிவாயு தாண்டி பிற தொழில்துறை களில் எல்பிஜியை விரிவா க்குவது குறித்து எட்டு கட் டங்களாக விரிவாகவும் சி என்ஜி மற்றும் எல்பிஜி வணிக வளர்ச்சி ஒப்பிடப் பட்டும் பேசப்பட்டது. உல கில் எல்பிஜி உற்பத்தியில் இந்தியா ஆறாவது இடத்தி லும், நுகர;வில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. விழா வில் கொச்சி, செயல் இயக் குனர், முரளி மாதவன் பேசும் போது:-

தொழில் வளர்ச்சிக்கு, எல்பிஜியின் பயன்பாடு பல வழிகளில் விரிவாக்கம் பெற் றுள்ளது. புவி வெப்பமய மாதலை பற்றி இந்த இரண்டு நாட்கள் கருத்தரங்கில் விரி வாகப் பேசப்பட்டது என்றார்.

இந்தியன் ஆயில் நிறு வனத்தின் மார்க்கெட்டிங் இக்குனர் பேசிய தாவது :-

டிஸ்ட்ரிபியூட்டர் விரி வாக்கத்தில் நவீன தொழில் நுட்பத்தை புகுத்துவதில் மிகவும் முனைப்பாக உள் ளோம் என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்தியன் ஆயில் காட;ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் சஞ்சீவ் சிங் பேசியதாவது :- இந்த இரண்டு நாள் மாநாடு மிகச் சிறப்பான நடை பெற்றது மிகவும் மகிழ்ச்சி யாக உள்ளது. நவீன தொழில்நுட்பம், விநியோ கஸ்தர்களின் நல்ல ஒத்து ழைப்பு ஐஓசியின் வளர்ச் சிக்கு உதவுகிறது.

வசதி களை பூர்த்தி செய்து தக்க வைத்துக் கொள்வதில் முழு ஈடு பாட்டோடு இருக்க வேண் டும்.

வாடிக்கை யாளர்களின் எந்த பிரச் சனைக்கும் தீர்வு தருவதில் இந்தியன் ஆயில் நிறுவனம் சிறந்த ஒத்துழைப்பை வழ ங்கும். இவ்வாறு அவர் பேசினார்.

பைப்லைன் மூலம் எரி வாயு கொண்டுசெல்லும் திட்டங்களிலும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறு வனம் கவனம் செலுத்தி வருகிறது என்று பேசினார்.

விழாவில் சிறந்த கண் காட்சியாளருக்கு விருது வழங்கப்பட்டது.

விழா முடி வில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில அலுவலக செய லாக்க இயக்குனா; ஜெய தேவன் கூறினார்.

## Malayala Manorama 05.03.2020

### പാചകത്തിന് എൽപിജി ഉപയോഗിക്കുന്നവർ കൂടി

കോയമ്പത്തൂർ● രാജ്യത്തു പാചകത്തിന് എൽപിജി ഉപയോഗിക്കുന്നവരുടെ എണ്ണം വർധിക്കുന്നതായി ഇന്ത്യൻ ഓയിൽ കോർപറേഷൻ ലിമിറ്റഡ് ചെയർമാൻ സഞ്ജീവ് സിങ്. ദേശീയതല എൽപിജികോൺക്ലേവ് സമാപന യോഗത്തിൽ മുഖ്യാതിഥിയായി പങ്കെടുത്ത് പ്രസംഗിക്കുകയായിരുന്നു അദ്ദേഹം. വിറക്. കൽക്കരി, ഡീസൽ എന്നിവയുമായി താരതമ്യംചെയ്യുമ്പോൾ പരിസ്ഥിതി ശുചിത്വത്തിന് എൽപിജിയാണ് ഉത്തമം. ഇപ്പോൾ ആവശ്യത്തിനുള്ള എൽപിജിയിൽ പാതിയും വിദേശത്തു നിന്ന് ഇറക്കുമതി ചെയ്യുന്നതാണ്. അതിനാൽ എൽപിജിയുടെ ഗാർഹിക ഉൽപാദനം വർധിപ്പിക്കാനാണ് ശ്രമമെന്ന് സഞ്ജീവ് സിങ് അറിയിച്ചു. രത്നഗിരി റിഫൈനറീസ് ആൻഡ് പെട്രോ കെമിക്കൽസ് ചെയർമാൻ ബി.അശോക്, ഐഒസി എൽപിജി എക്സിക്യൂട്ടീവ് സുനിൽ മാത്തൂർ, മാർക്കറ്റിങ് ഡയറക്ടർ ഗുർമീത് സിങ്,കൊച്ചി റിഫൈനറീസ് എക്സിക്യൂട്ടീവ് ഡയറക്ടർ മുരളി മാധവൻ, ഐഒസിസി തമിഴ്നാട് സ്റ്റേറ്റ് ഓഫിസ് എക്സിക്യൂട്ടീവ് ഡയറക്ടർ പി.ജയദേവൻ എന്നിവർ പ്രസംഗിച്ചു.

## Kovai Talk 05.03.2020

### விரைவில் நாடு முழுவதும் பாரத் ஸ்டேஜ் 6 எரிபொருள் சப்ளை

### ஐஓசிஎல் தலைவர் சஞ்சீவ் சிங் தகவல்

கோயம்புத்தூர்,

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் ஆதித்யா கன்வென்சன் சென்டரில் நடைபெற்ற தேசிய அளவிலான எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு (29.02.2020) அன்று நிறைவுபெற்றது.

விழாவில் ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோ கெமிக்கல்ஸ் லிட் நிறுவனத்தின் தலைவர் பி.அசோக், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் எஸ்.எஸ்.வி.ராம்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மாநாட்டை துவக்கி வைத்தனர். துவக்கவிழாவை தொடர்ந்து தொழில்நுட்ப கருத்தரங்குகள் நடைபெற்றன.

இரண்டாவது நாள் நிறைவு விழாவில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் எல்பிஜி செயலாக்க இயக்குனர் சுனில் மாத்தூர் வரவேற்புறையாற்றினார்.

விழாவில் கொச்சி, ரீபைனரி செயல் இயக்குனர், முரளி மாதவன், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் இக்குனர் குர்மீத்சிங் ஆகியோர் சிறப்புறையாற்றினர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாநாட்டின் நிறைவு விழாவில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் சஞ்சீவ் சிங் பேசுகையில்,

எல்பிஜியின் எதிர்காலம் இந்தியாவில்




சிறப்பாக உள்ளது. நவீன தொழில்நுட்பம், விநியோகஸ்தர்களின் நல்ல ஒத்துழைப்பு ஐஓசியின் வளர்ச்சிக்கு உதவுகிறது. வாடிக்கையாளர்களின் எந்த பிரச்சனைக்கும் தீர்வு தருவதில் இந்தியன் ஆயில் நிறுவனம் சிறந்த ஒத்துழைப்பை வழங்கும்.

பாரத் ஸ்டேஜ் 6 வாகனங்கள் வெளியிடும் என்ஓஎக்ஸ் வெளியீடுகள், நுண்துகள் வெளியீடுகள் மற்றும் ஹைட்ரோகார்பன் வெளியீடுகள் மிகமிக குறைவாகவே உள்ளன. கந்தகம் குறைந்த எரிபொருளுடன் பழைய தலைமுறை டீசல் வாகனங்களை இயக்கும் போதும்கூட நுண்துகள்கள் வெளியீடு கணிசமாக குறைந்துவிடும். மேலும், கார்சினோஜெனிக் வெளியீடும் குறைந்து, தரமான சோதனை நிலைகளின் கீழ் பாரத் ஸ்டேஜ் 6 டீசலின் வெளியீட்டு விதிகள் கம்ப்ரஸ்டு நேச்சுரல் கேஸில் உள்ளதைவிட நன்றாக அல்லது உயர்ந்ததாக உள்ளன.

சுத்தமான எரிபொருள் திட்டத்திற்காக ரூ.17,000 கோடி ஒருங்கிணைக்கப்பட்ட செலவில் பாரத் ஸ்டேஜ்6 எரிபொருள் தயாரிப்பிற்கு இந்தியன் ஆயில் சுத்திகரிப்பு நிலையங்கள் மாறிவிட்டன.

ஏப்ரல் 1,2020 என்ற கடைசி தேதிக்குள் நாடு முழுவதும் பாரத் ஸ்டேஜ் 6 எரிபொருள் சப்ளையை வாடிக்கையாளருக்கு கொண்டு சேர்க்கும் வண்ணம் விநியோக கட்டமைப்புடன் தயாராக இருப்பதில் இந்நிறுவனம் உறுதியாக உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை சமையல் காஸ் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருகிறது. விறகு, கரி, டீசல் உள்ளிட்டவற்றைக் காட்டிலும் எரிவாயுவின் பயன்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உகந்தது. தற்போது மொத்த எரிவாயு பயன்பாட்டில், இயற்கை எரிவாயுவின் பங்களிப்பு 6 சதவீதமாக உள்ளது. இதை 15 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பைப்லைன் மூலம் எரிவாயு கொண்டு செல்லும் திட்டங்களிலும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது. மக்களின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதில் இந்தியன் ஆயில் நிறுவனம் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகிறது. என்று பேசினார்.

விழாவில் சிறந்த கண்காட்சியாளருக்கு விருது வழங்கப்பட்டது. விழா முடிவில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

## Madurai Minutes 05.03.2020

# பாரத் ஸ்டேஜ் 6 எரிபொருளை நாடு முழுவதும் கொண்டு சேர்க்க உறுதியுடன் இருக்கும் இந்தியன் ஆயில் நிறுவனம்



கோவை,

கோவையில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் 28 மற்றும் 29 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற தேசிய அளவிலான எல்பிஜி எரிவாயு குறித்த கருத்தரங்கு நிறைவுபெற்றது.

இந்த கருத்தரங்கு கோவை சரவணம்பட்டி - துடியலூர் சாலையில் அமைந்துள்ள ஆதித்யா கன்வென்சன் சென்டரில் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற துவக்க விழாவில் ரத்னகிரி ரிபைனரிஸ் அண்டு பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் அசோக், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயக்குனர் ராமகுமார் ஆகியோர் கலந்து கொண்டு மாநாட்டை துவக்கிவைத்தனர். துவக்கவிழாவை தொடர்ந்து தொழில்நுட்ப கருத்தரங்குகள் நடைபெற்றன.

இரண்டாவது நாள் நடைபெற்ற நிறைவு விழாவிற்கு வந்திருந்தவர்களை இந்தியன் ஆயில் நிறுவனத்தின் எல்பிஜி செயலாக்க இயக்குனர் சுனில் மாத்தூர் வரவேற்று பேசினார்:- கொச்சி, ரீபைனரி செயல் இயக்குனர், முரளி மாதவன், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் இயக்குனர் குர்மீத் சிங் சிறப்புரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாநாட்டின் நிறைவு விழாவில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் சஞ்சீவ் சிங் பேசும்போது, ஏப்ரல் 1,2020 என்ற கடைசி தேதிக்குள் நாடு முழுவதும் பாரத் ஸ்டேஜ்-6 எரிபொருள் சப்ளையை வாடிக்கையாளருக்கு கொண்டு சேர்க்கும் வண்ணம் விநியோக கட்டமைப்புடன் தயாராக இருப்பதில் இந்நிறுவனம் உறுதியாக உள்ளது. தற்போது மொத்த எரிவாயு பயன்பாட்டில், இயற்கை எரிவாயுவின் பங்களிப்பு 6 சதவீதமாக உள்ளது.

இதை 15 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மக்களின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதில் இந்தியன் ஆயில் நிறுவனம் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகிறது. என்று பேசினார்.

விழாவில் சிறந்த கண்காட்சியாளருக்கு விருது வழங்கப்பட்டது. விழா முடிவில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில அலுவலக செயலாக்க இயக்குனர் ஜெயதேவன் கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.